# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2010

# தமிழ்மொழி

## ஆண்டு 11

**நேரம்: 180 மணித்துளிகள்**

சுட்டெண்:

**மொத்தப்புள்ளிகள் : 100**

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. இளங்கோவடிகள் சிலப்பதிகார வாழ்த்தில் போற்றுவது

   அ) இயற்கையை ஆ) இறையை இ) மன்னரை ஈ) மக்களை

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. இக்காலம் தொடங்கி இலங்கையில் தமிழர் வாழ்கின்றனர்

   அ) மூவேந்தர்காலம் ஆ) இராவணன்காலம்

   இ) கற்பகாலம் ஈ) புதியகாலம்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தேமாங்கொழுந்தொழுக பைந்தார் அசோகம் மடலவிழ வந்தது

   அ) தென்றல் ஆ) கார்காலம் இ) நற்காலம் ஈ) இளவேனில்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. ஆயர்குல மங்கையர் ஆடிய ஆட்டம்

   அ) பரதம் ஆ) குரவை இ) காவடி ஈ) பொய்க்கால்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. தான் அறம் தவறியதை உணர்ந்ததும் வீழ்ந்திறந்த பாண்டியன்

   அ) நெடுஞ்செழியன் ஆ) வெற்றிவேற் செழியன்

   இ) சேரன்செங்குட்டுவன் ஈ) குமணன்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. தொகைகள் எத்தனை வகைப்படும்?

   அ) எழுவகை ஆ) மூவகை இ) அறுவகை ஈ) ஐவகை

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. கண்ணகி வழிபாட்டை இலங்கைக்குக் கொண்டு வந்தவன்

   அ) விசயவாகு ஆ) கயவாகு இ) பராக்கிரமவாகு ஈ) தேவநம்பியதீசன்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. விளைந்தபயிர் என்ற பெயரெச்சத்தொடரை வினைத்தொகை ஆக்கினால்

அ) பயிர்விளை ஆ) விளையும்பயிர் இ) விளையாப்பயிர் ஈ) விளைபயிர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. நிலைத்திணை என்றால்

அ) மரஞ்செடிகொடி ஆ) கல்மண் இ) ஆடுமாடு ஈ) ஆறுகடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. செயப்படுபொருள் குன்றிய வினைக்கு எடுத்துக்காட்டு

அ) குடித்தது ஆ) ஓடுகிறது இ) ஓடுதல் ஈ) குறைவினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. தமிழரது மூளைக்கு விலங்கிட்ட நூல்களில் ஒன்று

அ) சிலப்பதிகாரம் ஆ) யாழ்நூல் இ) மகாவம்சம் ஈ) இராமாயணம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது உள்ளக்கமலம் என்பதில் உள்ள அணி

அ) உவமையணி ஆ) உயர்வுநவிற்சியணி

இ) உருவகவணி ஈ) சொல்லணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. கூத்தியும் வெட்கப்படும்படி திறனுடன் இராவணன் கற்ற கலை

அ) இசை ஆ) கூத்து இ) போர் ஈ) சிலம்படி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. வாய்மொழி இலக்கியம், எழுதாப்பாடல் என்று கூறப்படுவது

அ) தாலாட்டு ஆ) ஒப்பாரி இ) நாட்டார்பாடல் ஈ) இசைப்பாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. திரு என்ற அடை சேர்ந்த திருக்குறள் போல் ஈசன் என்ற அடைசேர்ந்த தமிழ் மன்னன்

அ) எல்லாளன் ஆ) சேரன் செங்குட்டுவன்

இ) நெடுஞ்செழியன் ஈ) இராவணன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. சாந்தமேனம் இச்சொற்றொடரைப் பிரித்தால்

அ) சாந்தம் + ஏனம்　　ஆ) சாந்த + மேனம்
இ) சாந்தமே + நம்　　ஈ) சாந்து + ஏனம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. இசையிலக்கணம் வாங்கினேன். இச்சொற்றொடரில் இடம்பெற்றுள்ள தொகை

அ) அன்மொழித்தொகை　　ஆ) உவமைத்தொகை
இ) உம்மைத்தொகை　　ஈ) வினைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. கட்டுவித்தான் என்ற பிறவினையைத் தன்வினை ஆக்கினால்

அ) கட்டுகிறான்　　ஆ) கட்டினான்　　இ) கட்டுவான்　　ஈ) கட்டான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. 'கொவ்வை இதழ் மகளே! என் குவிந்த நவரத்தினமே!' இவ்வரி இடம்பெறும் பாடல் வகை

அ) ஒப்பாரி　　ஆ) ஏர்ப்பாட்டு　　இ) தாலாட்டு　　ஈ) வாழ்த்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. 1981ம் ஆண்டு யாழ்நூலகத்தை எரிப்பதற்குத் தலைமை தாங்கிய சிங்கள அமைச்சன்

அ) எசு.பி.திசநாயக்கா　　ஆ) ஆர்.டி. பண்டாரநாயக்கா
இ) டி.பி.நாணயக்காரா　　ஈ) காமினி திசநாயக்கா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. சிங்களவரைச் சிறைப்பிடித்துச்சென்று காவேரிக்கு அணை கட்டுவித்த மன்னன்

அ) சேரன் செங்குட்டுவன்　　ஆ) கரிகாற்சோழன்
இ) பராந்தகசோழன்　　ஈ) பாண்டியன் இராசசிம்மன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. இலங்கை சோழரின் ஆட்சியுடன் இணைந்திருந்த போது தலைநகராக மாற்றப்பட்ட இடம்.

அ) அநுராதபுரம்　　ஆ) பொலநறுவை

இ) கண்டி　　ஈ) கொழும்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. ஓங்குபுகழ் தமிழர் கற்கள். இவை

அ) வைரக்கற்கள் ஆ) சாமிக்கற்கள் இ) நடுகற்கள் ஈ) செங்கற்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. எந்த நாட்டில் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் ஒருவரை அடையாளங் காட்டுவது

அ) நடையுடை ஆ) உணவுமுறை இ) பேசும்மொழி ஈ) தாய்மொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. இறைவன் விரும்பி உறையும் கோவில்

அ) கற்கோயில் ஆ) ஏழையின் உள்ளம்

இ) காசுக்காரர் உள்ளம் ஈ) கோபுரக்கோவில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. சிமென்ட் என்ற ஆங்கிலச் சொல்லின் நற்றமிழ்

அ) பந்தனம் ஆ) வெண்சுதை இ) பைஞ்சுதை ஈ) பைங்குழையல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. சிலம்பில் மாசாத்துவான் என்பவன்

அ) நிலவணிகன் ஆ) கடல்வணிகன்

இ) சந்தை வணிகன் ஈ) துணிவணிகன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. பன்னிரண்டு அகவையில் அரங்கேறித் தலைக்கோல் பெற்றவள்

அ) மாதரி ஆ) கண்ணகி இ) மாதவி ஈ) சித்திராபதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. ஆகுபெயருக்கு எடுத்துக்காட்டு

அ) வண்டில் ஆ) பொங்கல் இ) அரிசி ஈ) வயல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. இணைமொழிக்கு எடுத்துக்காட்டு

அ) பளபள ஆ) நடுநடுங்கி இ) கல்விகேள்வி ஈ) மெல்லமெல்ல

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

உலகில் முதல் மாந்தத் தோற்றம் நிகழ்ந்த இடம் குமரிக்கண்டம். பலதடவை நிகழ்ந்த கடற்கோள்களால் குமரிக்கண்டம் உடைந்து சிதறிக் கடலுள் மூழ்கியது. இது மூழ்கிய இடந்தான் இன்று இந்துமாவாரியாக உள்ளது. இவ்வாறு உடைந்து சிதறியபோது மீந்துள்ள பகுதிகளில் ஒன்றுதான் இலங்கை. குமரிக்கண்டம் அழியுமுன் அதை ஆண்ட பேரரையர்கள் இலங்கை நகரையே தலைநகராகக் கொண்டிருந்தனர். அதனால், கல்விகேள்விகளால் நிறைந்த அரசகருமம் புரிவோரால் இலங்கை நிறைந்திருந்தது. அது உடைந்து தனித்தீவானபோது அந்த இலங்கைத்தீவு அறிவுடையார் நிறைந்த தீவாயிற்று. உடைந்த பின்னும் இலங்கையில் இருந்துதான் மன்னர்கள் மீந்திருந்த தமிழகம் முழுவதையும் ஆண்டனர். இலங்கையிலிருந்து தமிழகம் முழுவதையும் ஆண்ட கடைசி மன்னன் இராவணன். இவன் பெரும் கல்விமான்: தனக்கு நிகரற்ற இசைவாணன்: ஈடிணையற்ற ஆடற்கலை வல்லோன்: அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி என்று ஆண்மைக்குரிய நாற்குணங்கள் நிறைந்தவன். அஞ்சாமைமிக்க மாவீரன்: மாந்தநேயம் மிக்க சான்றோன். உடன்வயிற்றோனான இரண்டகன் வீடணனாலும் ஆரிய சூழ்ச்சிக்காரர்களாலும் வீழ்த்தப்பட்டான். அவனுடைய காலத்தில் இலங்கை கல்விகேள்விகளால் மட்டுமன்றி, கலைகளாலும் செல்வச் செழிப்பாலும் மிக மேன்மையுற்று இலங்கியது. அதனால் தான், இலங்கை என்று அழைக்கப்பட்டது. இக்கரணியத்தால் உலகெங்கும் வழங்காத இனிய செந்தமிழ் இன்றும் இலங்கையில் விளங்குகிறது. எனவே, மாந்தத் தோற்றம் முதற்கொண்டு தமிழன் வாழ்ந்த, வாழ்கிற இடம் இலங்கை. இலங்கை தமிழருடைய நாடு. இன்று வந்தேறு குடிகளான சிங்களர் தங்கள் நாடு என்று கூறிப் பெயரையும் சிறிலங்கா என்று மாற்றிவிட்டனர். அதுவும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் மாற்றப்பட்டது. இன்றைய இனவழிப்பிற்கும் இப்பெயர் மாற்றத்திற்கும் தொடர்பிருக்கிறது. இலங்கை என்றிருந்தால் இது தங்கள் தேயம் என்று சொல்வதற்கு இடராயிருக்கும் என்பதாலேயே சிங்களர் பெயரை மாற்றியுள்ளனர்.

1. குமரிக்கண்டத் தமிழகத்தின் தலைநகராக இருந்த நகரம் எது?

______________________________________________

______________________________________________

2. எத்தகையோரால் இலங்கை நிறைந்திருந்தது?

______________________________________________

______________________________________________

3. ஆண்மைக்குரிய நாற்குணங்கள் யாவை?

______________________________________________

______________________________________________

4. மாந்தத் தோற்றம் முதற்கொண்டு தமிழன் வாழ்கிற இடம் எது?

______________________________________________

______________________________________________

5. இலங்கை என்ற பெயர் எதனால் உண்டாயிற்று?

______________________________________________

______________________________________________

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

1. எரிக்கப்பட்ட யாழ்நூலகத்தின் சிறப்புகளை விளக்குக.

______________________________________________

______________________________________________

______________________________________________

2. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்று புகழப்படுவது ஏன்?

______________________________________________

______________________________________________

______________________________________________

3. கோவலனும் கண்ணகியும் புகார்நகரை விட்டுப் புறப்பட்ட பொழுதை விளக்குக.

______________________________________________

______________________________________________

______________________________________________

4. மானிடா சொல் கவிதையில் இறைவன் மானிடனைக் கேட்கும் கேள்விகள் யாவை?

5. இராவணகாவியம் என்றால் என்ன? ஏன் எழுதப்பட்டது?

6. இராவணனது உடன்வயிற்றோரின் பெயர்களைத் தருக.

7. நாட்டார் பாடலில் 'ஓடி நேர் பிடிச்சு ஒரு கூடை கொழுந்தெடுக்க' இப்பாடலின் வரி எத்தொழிலுடன் தொடர்புடையது. எங்கே இடம் பெறுகிறது என்பதை விளக்குக.

(புள்ளிகள் 10)

## 4) பாடலை வாசித்து, முழுவிடை தருக.

வையத்துள் வாழும் வழிதெரிந்து வாழ்ந்திடுக
ஐயமின்றி நெறிகாண ஐயன் திருக்குறளை
கைக்கொண்டு கற்று களைந்திடுக தீதுகளை
மானம் மனத்திருத்தி மாண்புகளை மேவிடுக!

தாங்கிடுக! பிறர்துயரை தங்கிடுக! இனவுணர்வில்
ஓங்கிடுக! கல்வியிலே ஒப்பரிய அறிவியலில்
தாய்மண்ணே உடலாகும் தன்மொழியே உயிராகும்
இங்கிரண்டும் இருந்தாலே இயலுமாம் உயிர்வாழ்வு

வாழ முனைந்திடுக! வலிவுபெற்ற உளத்தாலே
சூழும் துயர்கண்டு துவளாதீர் துணிந்திடுமின்
இன்றுபோல் நாளை இருக்காது மாறுபடும்
இன்றேநீர் பாடாற்றி நிலைத்திடுக! நாளைக்காய்

இன்று நிகழ்காலம் நேற்றோ இறந்ததுவே
நாளை வருங்காலம் எதிர்காலம் இன்றறியோம்
நின்றுநீர் நிலைப்பதற்கு அன்றன்றே ஆற்றிடுக!

1. எதைத் துணைக்கொண்டு தீதுகளைக் களையவேண்டும்?

_______________________________________________

_______________________________________________

2. உயிர்வாழ்வு இயல்வதற்கு வேண்டிய இரண்டும் எவை?

_______________________________________________

_______________________________________________

3. துவளாது துணிவு கொள்ள வேண்டிய வேளை எது?

_______________________________________________

_______________________________________________

4. முக்காலத்துள் எக்காலம் வாழ்வதற்கு உரியது?

5. இன்றுபோல் நாளை இருக்காது. என்ற கூற்றிலிருந்து நீர் உணர்வதென்ன?

(புள்ளிகள் 10)

## 5) அனைத்து இலக்கண/மொழியியல் வினாக்களுக்கும் விடை தருக.

1. செய்வினைக்கும் செயப்பாட்டுவினைக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

2. வினையாலணையும் பெயர் எவ்வாறு உருவாகுகிறது? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

3. அன்மொழித்தொகை என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

4. தரப்பட்டுள்ள சொற்றொடர்களின் மரபுப்பெயர்களை எழுதுக.

கல்விகேள்வி: ______________________________

அழுதழுது: ______________________________

பென்னம்பெரிய: ______________________________

குடுகுடு: ______________________________

ஓட்டைவாய்: ______________________________

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு: ______________________________

5. அமைவு அடிப்படையில் சொல்லிய வகைகளைத் தருக.

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

(புள்ளிகள் 15)

6) பந்தியை தாய்மொழியில் மொழிமாற்றுக.

Lors d'une rencontre de jeunes venant de tous les pays, chacun flatté son pays. L'étudiant venant de la Russie dit que son pays a été le premier a manifesté pour "l'union des travailleurs" et a bouleversé le monde. "La philosophie du développement d'un individu" a fait évolué mon pays dit un jeune américain. "Le Gandhisme" est un hommage distinctif, digne de notre pays mais c'est aussi un pays aryenne qui réussit à effacer les peuples minoritaires. Le pays "Ne demandant aucunes aides aux autres pays, se développer avec sa propre force" est la Chine dit un chinois. L'un honteux, demande la tête baissée, à tout le monde, s'ils connaissaient le pays où on détient son propre peuple dans des fils barbelés?

Students of many countries were speaking highly of their countries. My country is the first country which roared “world labourers unite” and thus awakened the new world said the Russian student. By the philosophy “a Individual man's development is needed”, my country became great said the American. Even though Ghandism is the gracious property of our country we are the Aryan country which succeeded in suppressing the minority communities said the Indian student raising his shoulders up. “Don't beg foreign countries” and thus showed the power of its people to the world said a Chinese student about China. Which country locked its own people in barbed wire fence? Said one student, shamefully bowing his head.

Studenter fra mange forskjellige land snakket godt sitt land under et møte. Mitt land var det første landet som skrek „ verdens arbeidere forenes“ og dermed våknet den nye verden. Med filosofien „individet utvikling er nødvendig“ ble mitt land stort sa amerikaneren. Selv om ghandisme er en hyllesverdig egenskap ved vårt land, så er vi det ariske land som lykkes i å undertrykke minoriteter sa inderen mens han reiste seg standhaftig. „Ikke tigg utlandet“ og viste sin makt til verden sa den kinesike studenten om Kina. Hvilket land internerte sitt eget folk bak piggtråd? Spurte den ene studenten mens han skamfult bøyde seg.

(புள்ளிகள் 05)

7) **கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிந்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- நாட்டார் பாடல்
- கண்ணகி - பாடத்தின்படி அவளது வாழ்வும் முடிவும்
- முள்வேலி முகாங்களும் தமிழர் அவலமும்
- **கைய்ட்டி ( Haiti ) பூகம்பம். ஐசலாந்து ( Island) எரிமலைக் குமுறல். இவற்றுடன் இணைத்து உலகின் எதிர்காலம் பற்றிய உமது எண்ணங்களைத் தருக.**

(புள்ளிகள் 20)